உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் தனது வேட்பு மனுவினை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார். உடன் மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வராசாமி உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்

அவிநாசி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், இளம் மருத்துவர் கோகிலாமணி தனது வேட்பு மனுவினை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார். உடன் கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர், மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர் சு.பத்மநாபன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் S.T.ஜெயலெட்சுமி, பெரம்பலூர் ஒன்றியம்,எளம்பலூர் கிராமத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் ஒன்றிய கழக செயலாளர் எம்.இராஜ்குமார் தலைமையில் வாக்குகள் சேகரித்தார். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், பொதுக்குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை உள்ளிட்ட தி.மு.க.வினர் மற்றும் காங்கிரஸ்,ம.தி.மு.க.விடுதலை சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

பெரம்பலூர் பாராளுமன்ற எம்.பி. அருண் நேரு மண்ணச்சநல்லூர் வேட்பாளர் கதிரவனை ஆதரித்து, மண்ணச்சநல்லூர் பகுதியில் பொதுமக்களிடம் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார் . ஒன்றிய. செயலாளர்கள் ராமச்சந்திரன், வழக்கறிஞர் செந்தில்,செந்தில்குமார் காட்டுக்குளம் கணேசன், ராஜேஷ், சீனிவாச பெருமாள் உட்பட கழக நிர்வாகிகளும் தோழமைக் கட்சி நிர்வாகிகளும் உடன் சென்றனர்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்

கே.எம்.ராஜ் தொடர் வாக்கு சேகரிப்பு!

கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்பு!

நீலகிரி, ஏப்.9- நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜு அறிவிப்பு வருமாறு:- 09.04.2026-கீழ் கோத்தகிரி ஒன்றியம், 10.04.2026-குன்னூர் ஒன்றியம், 11.04.2026 காலை- கோத்தகிரி ஒன்றியம்,11.04.2026-மாலை கழக துணை பொதுசெயலாளர் ஆ.இராசா எம்.பி. வாக்கு சேகரிப்பு, கோத்தகிரி கீழ் கோத்தகிரி ஒன்றியம், 12.04.2026 காலை- கோத்தகிரி பேரூர், 12.04.2026 மாலை- தேர்தல் பிரச்சார பொது கூட்டம் கழகதுணை பொதுசெயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. சிறப்புரை.13.04.2026-குன்னூர் நகரம், 14.04.2026 காலை வெலிங்டன் கண்டோன்மெண்ட், 14.04.2026 மாலை-ஜெகதளா பேரூர் கழகம் மற்றும் குன்னூர் ஒன்றியம், 15.04.2026 கோத்தகிரி ஒன்றியம் கோத்தகிரி பேரூர் கழகம் 16.04.2026-அதிகரட்டி பேரூர் கழகம், 17.04.2026 மாலை-குன்னூர் ஒன்றியம், 19.04.2026-உலிக்கல் பேரூர் கழகம்,21.04.2026-குன்னூரில் பிரச்சாரம் நிறைவு செய்தல் ஆ. இராசா எம்.பி..

பிரச்சாரம்மேற்கண்ட வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சிகளில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரியலூர் தொகுதி வேட்பாளர்

லதாபாலுவை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் மேற்கொண்டார்!

அரியலூர், ஏப். 9- அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் லதா பாலு அறிமுகம் செய்யும் மாபெரும் கூட்டம் அரியலூரில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திர சேகரன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தமிழ் நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு அரியலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் லதாபாலு அவர்களை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா,

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் மாரியம்மாள், தேசிய முற்போக்கு திராவிடர் கழக மாவட்ட செயலாளர் ஜெயவேல், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட கழக செயலாளர் அங்கனூர் சிவா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் நடராஜன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட செயலாளர் ராமநாதன், திராவிட கழக மாவட்ட கழக செயலாளர் நீலமேகம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட கழக செயலாளர் சாகுல் ஹமீது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி மாவட்ட செயலாளர் சையது இப்ராஹிம், மனிதநேய ஜனநாயகட்சி மாவட்ட செயலாளர் அக்பர் அலி, இந்திய குடியரசு கட்சி மாவட்ட தலைவர் ராஜீவ் காந்தி,எஸ்.டி.பி.ஐ. மாவட்ட செயலாளர் அமீன் சுல்தான், அரியலூர் தொகுதி சட்டமன்ற மேற்பார்வையாளர் ப.அன்பரசு மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர கழக நிர்வாகிகள், தோழமை கட்சி நிர்வாகிகள் பலரும் செயல் வீரர்கள் இந்தச் சந்திப்பில் பெருந்திரளாகக் கலந்துகொண்டு தங்கள் பேராதரவை வெளிப்படுத்தினர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி ஒன்றியம் பாரூர், மருதேரி, அரசம்பட்டி, கோட்டப்பட்டி, கீழ்குப்பம் உள்ளிட்ட பஞ்சாயத்துகளை சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார். அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர்தூவியும் உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் மாவட்ட அவை தலைவர் நாகராஜ் ,ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் இனிகோ இருதயராஜ் திருச்சி சிந்தாமணி பகுதிகளில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில பொதுச் செயலாளர் வழக்குரைஞர் எம்.சரவணன் காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு மாவட்ட தலைவர் சிந்தாமணி ஜெ.செந்தில்நாதன் அண்ணா சிலை விக்டர் மலைக்கோட்டை சொக்கலிங்கம் ரவி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். இந்நிகழ்வில் காங்கிரஸ் கோட்டத் தலைவர் வெங்கடேஷ் காந்தி பாலமுருகன் மற்றும் ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்குகளை சேகரித்தனர்.

தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் டாக்டர் டி.இந்திராணி தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கினார். உடன் கழக மகளிர் அணி துணை செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி, தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் காளிமுத்து, கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் கனகராஜ் உள்ளனர்.

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர், வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், தனது வேட்பு மனுவை திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் அமித்திடம் வழங்கினார். உடன் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், காங்கிரஸ் கட்சி நிர்வாகி கோபால் உள்ளனர்.